# ராஜதந்திரம் காட்டும் இந்தியா!

உலக நாடுகள் பலவும் நாடுகளுக்கு இடையே பல துறைகளில் இணைந்து செயல்படுவதற்காக பல அமைப்புகளை உருவாக்கி தங்களுக்குள் பல்வேறு பரிவர்த்தனைகளைச் செய்து கொள்கின்றன. அப்படிப்பட்ட ஓர் அமைப்பே 'பிரிக்ஸ்' கூட்டமைப்பு. 2006-ஆம் ஆண்டு பிரேசில், ரஷியா, இந்தியா, சீனா ஆகியவை இணைந்து 'பிரிக்' என்ற அமைப்பை உருவாக்கின. 2010-இல் தென்னாப்பிரிக்காவும் இந்தக் கூட்டமைப்பில் இணைந்தது. இதனால் இந்தக் கூட்டமைப்பு 'பிரிக்ஸ்' என்று பெயர் மாற்றம் பெற்றது.

இந்த அமைப்பு உருவான ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் கூடி மாநாடு நடத்துகிறது. இந்த ஆண்டு பிரிக்ஸ் கூட்டமைப்பின் 15-ஆவது மாநாடு தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகரில் கடந்த 22-ஆம் தேதி தொடங்கி நடைபெற்றது.



**கோதை ஜோதிலட்சுமி**

**எண்ணெய் வள நாடுகளின் வருகை, இந்தியா - சீனா நாடுகளுக்குப் பலனளிக்கக்கூடியது. கச்சா எண்ணெய் ஏற்றுமதியாளர்களும் இறக்குமதியாளர்களும் பிரிக்ஸ் கூட்டமைப்புக்குள் வருகின்றனர். கச்சா எண்ணெய் வர்த்தகம் இதுவரை டாலரில்தான் நடந்து வந்திருக்கிறது. அதனை முறிப்பதற்கான வாய்ப்பு இதனால் ஏற்படும்.**

கட்டுரையாளர்:
**ஊடகவியலாளர்.**

# தமிழகத்துக்கு காவிரியில் 5,000 கனஅடி நீர்

நமது சிறப்பு நிருபர்

**புதுதில்லி, ஆக.29:** காவிரியில் விநாடிக்கு 5,000 கன அடி நீரை அடுத்த 15 நாள்களுக்கு கர்நாடகம் திறந்துவிட வேண்டுமென காவிரி நீர் மேலாண்மை ஆணையம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுக் கூட்டத்தில் திங்கள்கிழமை (ஆக.28) எடுக்கப்பட்ட முடிவை ஏற்றுக் கொண்ட ஆணையம், இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

அதே சமயம் காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் உத்தரவை தமிழகம் அரசு ஏற்க மறுத்துள்ளது. இந்த அளவு நீர் போதாது எனவும் தமிழக நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

காவிரிநீர் மேலாண்மை ஆணையத்தின் 23-ஆவது கூட்டம் அதன் தலைவர் சௌமித்ர குமார் ஹல்தார் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

## கர்நாடகத்துக்கு மேலாண்மை ஆணையம் உத்தரவு

இந்தக் கூட்டத்தில் காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் தலைவரும் மத்திய நீர்வள ஆணையத்தின் உறுப்பினருமான வினீத் குப்தா, ஆணையச் செயலர் டி.டி. சர்மா, ஆணைய உறுப்பினர் (வேளாண் துறை) கோபால் லால், தமிழக காவிரி தொழில்நுட்பக் குழுத் தலைவர் ஆர்.சுப்பிரமணியன், கர்நாடக நீர்வளத் துறைச் செயலர் ராகேஷ் சிங் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், தமிழக அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் கூறியபடி பிலிகுண்டுலுவில் விநாடிக்கு 24,000 கன அடி தண்ணீர் திறந்துவிட வேண்டும் என முதலில் வலியுறுத்தப்பட்டது.

இதன்படி தண்ணீரை 10 நாள்களுக்கு கொடுத்தால் கர்நாடகம் நிலுவை வைத்துள்ள 49 டிஎம்சி தண்ணீரில் 25 டிஎம்சி தண்ணீரையாவது பெற முடியும் என தமிழகம் கூறியது.

பின்னர், பற்றாக்குறை காலம், கர்நாடக அணைகளின் நீர்வரத்து ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிட்டு ஒரு செயல்திட்டத்தை காவிரி ஒழுங்காற்றுக் குழு திங்கள்கிழமை உருவாக்கியது.

கர்நாடகத்தின் 4 அணைகளில் கடந்த 30 ஆண்டுகளின் சராசரி நீர்வரத்தின்படி, ஆகஸ்ட் 9-ஆம் தேதி 42.54 சதவீதம், ஆகஸ்ட் 27-ஆம் தேதி 51.22 சதவீதம் நீர்வரத்து பற்றாக்குறை என குழு கணக்கிட்டது. இந்த செயல்திட்டத்தை தமிழகம் ஏற்றுக்கொள்ளவில்லை.

எனினும், இதன் அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய தண்ணீரின் அளவின்படியாவது விநாடிக்கு 14,200 கன அடி தண்ணீரை வழங்க வேண்டும் எனவும் தமிழக சார்பில் வலியுறுத்தப்பட்டது.

ஆனால், இதற்கு கர்நாடகம் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தது. தென்மேற்கு பருவமழையை மட்டுமே நம்பியுள்ள கர்நாடகத்தில் 60 சதவீத பருவம் கடந்துவிட்டது. ஆனால், தமிழகத்துக்கு வடகிழக்கு பருவமழை மூலம் அதன் அணைகள் நிரம்ப வாய்ப்புள்ளது.

மழை பற்றாக்குறையால் கர்நாடகம் வறண்டு நீர்த்தேக்கங்களில் தண்ணீர் குறைவாக உள்ளது. நீர்ப்பாசனங்கள் குறைந்துள்ளன. எனினும், பெங்களூரு, மைசூரு, மாண்டியா மாவட்டங்களின் குடிநீர்த் தேவை, பல்வேறு வகையான தண்ணீர் இழப்புகள் போன்றவற்றைக் கருத்தில்கொண்டு விநாடிக்கு 3,000 கன அடி தண்ணீர் மட்டுமே தமிழகத்துக்கு வழங்க முடியும் என கர்நாடகம் குறிப்பிட்டது.

இரு மாநில வாதங்களையும் கேட்டறிந்த பின்னர், இறுதியாக காவிரி நீர் மேலாண்மை ஆணையத் தலைவர் எஸ்.கே. ஹல்தார், காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுக் கூட்டத்தின் பரிந்துரைகளைக் கவனத்தில்கொண்டு, அடுத்த 15 நாள்களுக்கு (29.08.2023 முதல் 12.09.2023 வரை) பிலிகுண்டுலுவுக்கு விநாடிக்கு 5,000 கன அடி தண்ணீர் வருவதை கர்நாடகம் உறுதி செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டார்.

இதன்படி, இந்த 15 நாள்களில் கர்நாடகம் தண்ணீரை குறைவில்லாமல் வழங்கினால் நாளொன்றுக்கு 0.4 டிஎம்சி வீதம் மொத்தம் தமிழகத்துக்கு சுமார் 6 டிஎம்சி தண்ணீர் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அருணாசலை இணைத்து புதிய வரைபடத்தை வெளியிட்ட சீனா

**புது தில்லி/பெய்ஜிங், ஆக. 29:** இந்தியாவுக்குள்பட்ட அருணாசலை இணைத்து புதிய வரைபடத்தை சீனா வெளியிட்டுள்ளதை மத்திய அரசு நிராகரித்துள்ளது.

சீனாவின் நடவடிக்கைக்கு காங்கிரஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

நடப்பாண்டுக்கான புதிய வரைபடத்தை சீனா திங்கள்கிழமை வெளியிட்டது. அதில் இந்தியாவுக்கு உள்பட்ட அருணாசல், அக்சாய் சின் உள்ளிட்ட பகுதிகளைத் தங்கள் பகுதிகளாக சீனா குறிப்பிட்டுள்ளது.

மேலும், தைவான், தென் சீனக் கடல் உள்ளிட்டவற்றையும் தங்கள் உரிமைக்கு உள்பட்ட பகுதியாக சீனா தெரிவித்துள்ளது.

அருணாசலுக்கு சீனா சொந்தம் கொண்டாடி வரும் நிலையில், இந்தப் புதிய வரைபடத்தை வெளியிட்டுள்ளது. அதே வேளையில், அருணாசல் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என வெளியுறவு அமைச்சகம் தொடர்ந்து தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.


## இந்தியா நிராகரிப்பு

சீனாவின் புதிய வரைபடம் குறித்து வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி கூறுகையில், 'சீனாவின் நடவடிக்கைகளை இந்தியா நிராகரிக்கிறது. சீன அரசின் இது போன்ற நடவடிக்கைகள், எல்லைப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதை மேலும் சிக்கலாக்கும். இது தொடர்பாக சீனாவுடன் தூதரக ரீதியில் எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளோம். எந்தவித அடிப்படையும் இல்லாமல் சீனா தயாரித்துள்ள புதிய வரைபடத்தை இந்தியா முற்றிலுமாக நிராகரிக்கிறது' என்றார்.

**காங்கிரஸ் கண்டனம்:** சீனாவின் புதிய வரைபடம் குறித்து காங்கிரஸ் தேசியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே எக்ஸ் (ட்விட்டர்) சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், 'அருணாசல், அக்சாய் சின் ஆகிய பகுதிகள் இந்தியாவுடன் என்றும் ஒருங்கிணைந்தவை. அவற்றை இந்தியாவில் இருந்து ஒருபோதும் பிரிக்க முடியாது. தன்னிச்சையாக சீனா உருவாக்கிய வரைபடங்கள் எதுவும் உண்மையை மாற்றிவிடாது.

மற்ற நாடுகளின் பிராந்தியங்களை சீனா தொடர்ந்து அத்துமீறி கைப்பற்ற முயல்கிறது. அவற்றை வரைபடங்களில் இணைப்பது, புதிய பெயர்களை இடுவது உள்ளிட்டவற்றில் சீனா ஈடுபட்டு வருகிறது.

சீனாவின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு காங்கிரஸ் கடும் கண்டனம் தெரிவிக்கிறது' எனக் குறிப்பிட்டுள்ளார்.



# இஸ்ரோவின் அடுத்த இலக்கு சூரியன்!

செப்டம்பர் 2 காலை 11.50 மணி

பூமி அங்கம் வகிக்கும் சூரியக் குடும்பத்தின் அடிப்படையாகத் திகழும் சூரியனை ஆய்வு செய்வதற்காக 'ஆதித்யா–எல்1' விண்கலத்தை இஸ்ரோ செப்டம்பர் 2–ஆம் தேதி காலை 11.50–க்கு விண்ணில் செலுத்தவுள்ளது.

## சூரியனை ஆய்வு செய்வதற்கான அவசியம்

## ஆதித்யா–எல்1 பயணம்

## எல்1 என்பது...

## திட்டத்தின் சிறப்புகள்

## முந்தைய சூரிய ஆய்வுத் திட்டங்கள்

1960–69

1974–1997

## ஆய்வுக் கருவிகள்